Registered as a Newspaper

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible]

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 7 வியாழக்கிழமை (20-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 113

## எம்.ஐ.-24 தாக்குதல் ஹெலி காணாமற்போய்விட்டது!

### அலம்பில் கடற் பகுதியில் சம்பவம்

கொழும்பு, மார்ச் 20

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான 'எம்.ஐ.-24'ரக தாக்குதல் ஹெலிக்கொப்டர் ஒன்று விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையின்போது நேற்றுக் காணாமற் போய்விட்டது.

முல்லைத்தீவு, அலம்பில் கடற்பிரதேசத்தில் இந்தக் ஹெலி கடைசியாகப் பறந்து கொண்டிருந்ததாகவும் —

நேற்றுப்பகல் 1.00 மணி அளவில் அதனுடனான தொடர்பு இல்லாமற் போய் விட்டதாகவும் — பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவிக்கிறது.

ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட இந்த

(8 ஆம் பக்கம் பகர்க்க)

## பொ. ஐ. முன்னணிக்கு கூட்டணி ஆதரவு!

''உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் பகுதிகள் அல்லாத மற்றைய பகுதிகளில் இருக்கின்ற தமிழர்கள் பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவளிக்க வேண்டும்'' இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்பில் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

தென் பகுதியிலுள்ள இரண்டு பெரும் அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரையில் இரண்டு கட்சிகளுமே மனித உரிமைகளை மீறியிருக்கின்றன. இரு கட்சிகளுமே 14 அல்லது 15 ஆண்டுகளாக தமிழ் மக்களைக் கொலை செய்திருக்கின்றன. அட்டூழியங்கள் எல்லாம் செய்திருக்கின்றன.

ஆனால் ஒரு தீர்வுக்கான யோசனையை முன் வைத்த ஒரேயொரு கட்சி பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆகும்.

இப்படி பி. பி. ஸி. தமிழோசைக்கு நேற்று வழங்கிய பேட்டி ஒன்றில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

தமிழ் பகுதிகள் அல்லாது மற்றைய பகுதிகளில் உள்ள தமிழர்கள் உள்ளூராட்சித் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியை ஆதரிக்க வேண்டும் என்றும் இவர் கேட்டுக் கொண்டார். (இ-4)

# அடிக்கடி விமான விபத்துக்கள் ஏன்?

# முழு அளவு விசாரணைக்கு உத்தரவு

## வெளிநாட்டு நிபுணர்களும் வருவர்

கொழும்பு, மார்ச் 20

விமானப் படைக்குச் சொந்தமான போர் விமானங்கள் அடிக்கடி விபத்துக்களுக்குள்ளாவது, காணாமற் போவது ஏன்? அதில் உள்ள மர்மம் என்ன?

அரசு பல விமானங்களைத் தொடர்ந்து இழந்து வருவதற்கு சதி வேலைகள் காரணமா? உள்வீட்டார் பங்கும் இதில் உண்டா?

இக்கேள்விகளுக்குப் பதில் அறியுமுகமாக, இழப்புகளுக்கு உண்மையான காரணங்கள் எவை என்று கண்டறிவதற்காக முழு அளவிலான விசாரணை நடத்துமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா விமானப் படைத் தளபதிக்கு நேற்று உத்தரவிட்டார்.

ஈழப் போர் – 3 தொடங்கிய 1995 ஏப்ரல் மாதத்தில் இருந்து நேற்றுவரை மொத்தம் பதினைந்து விமானங்களை விமானப்படை இழந்துள்ளது.

இவ்வருடத்தில் கடந்த இரண்டரை மாதங்களில் மட்டும் ஏழு போர் விமானங்கள் இழக்கப்பட்டுள்ளன:

விமானப் படை வசம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி




எந்தக் கட்சியில் இருந்தாலும் பதவி...... தொண்டாவின் பிடியை பிடிக்கிறார் போல ......!

## அரபாத் இலங்கை வருகிறார்

பலஸ்தீன ஜனாதிபதி யஸீர் அரபாத் உயர்மட்ட தூதுக் குழு ஒன்றுக்குத் தலைமை வகித்து இம்மாதம் 24 ஆம் திகதி இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொள்கிறார்.

கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உட்பட பல அரசியல் கட்சித் தலைவர்களுடன் இவர் பேச்சுவார்த்தை நடத்துவார்.

1976 ஆம் ஆண்டு, அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள அவர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். (இ-4)

## அடுத்த மேயர் பதவி யாருக்கு? கொழும்பில் போட்டிச்சுவரொட்டிகள்

கொழும்பு, மார்ச் 20

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவில் போட்டியிடும் சுயேச்சைக் குழு வெற்றி பெற்றால் அடுத்த மேயர் யார் என்பது குறித்து இழுபறிநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவு சுயேச்சைக் குழுவில் போட்டியிடும் கே. கணேசலிங்கம், ஆனந்த வஸந்த நாணயக்காரா ஆகிய இருவருடைய பெயர்களும் மேயர் பதவிக்கு அடிபடுகின்றனர்.

''கணேசலிங்கமே அடுத்த மேயர்'' என்றும் ''ஆனந்த வஸந்த நாணயக்காராவே அடுத்த மேயர்'' என்றும்— நகரில் மாறி மாறிச் சுவரொட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் அட்டைகள் மீரிகமவிலும் அபகரிப்பு

மீரிகம தபாலகத்திலிருந்து வாக்காளர் அட்டைகளையும் ஆயிரத்து 200 ரூபா பணத்தையும் ஆயுதக் குழு ஒன்று நேற்று அபகரித்துச் சென்றது.

தபால் நிலையத்தில் திறந்து வைக்கப்பட்டிருந்த பின் கதவால் நுழைந்த இந்த ஆயுதம் தாங்கிய குழுவினர் பின்னர் 'ஹைஏஸ்' வான் ஒன்றில் தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக மீரிகம பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஏற்கனவே புத்தளம் பகுதியில் உள்ள பல தபாலகங்களில் வாக்காளர் அட்டைகள் அபகரிக்கப்பட்டது தெரிந்ததே. (இ-4)

## புலிகளின் மோட்டார் தாக்குதலில் அதிவேக டோறா படகு சேதம்

### முல்லைத்தீவுப் பகுதியில் சனியன்று சம்பவம்

கொழும்பு, மார்ச் 20

கடந்த சனிக்கிழமைகாலை 9.45 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் சாலை என்னும் இடத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார் ஷெல் தாக்குதலில் கடற்படையினரின் அதிவேக தாக்குதல் டோறா படகு ஒன்று சேதமடைந்ததாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'த ஐலண்ட்' ஆங்கிலப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அப்பகுதியில் காணப்பட்ட கடற் புலிகளின் படகு ஒன்றைத் தாக்கும் நோக்குடன் கரைப் பகுதியை நோக்கி வந்த அந்த டோறா படகு மீது கரையில் இருந்து விடுதலைப் புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்தி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விமானப் பயணிகளை இன்று ரயில் நிலையம் வர அறிவுறுத்து

### இடம்மாற்றம் உடனடியாக அமுல்

யாழ்ப்பாணம், மார்ச் 20

விமானம் மற்றும் கப்பல் மூலம் பயணம் செய்யும் பயணிகள் இன்று முதல் யாழ். ரயில் நிலையத்தில் இருந்தே அழைத்துச் செல்லப்படுவர் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

இன்று விமான மூலம் பயணம் செய்ய விருப்போர் யாழ். ரயில் நிலையப் பகுதிக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஆஸ்பத்திரி வீதியூடாக முலவைச்சந்தியால் ஸ்ரேசன் சந்திக்கும் —

வேம்படி வீதி, மார்ட்டின் வீதி ஊடாக ஸ்ரேசன் சந்திக்கும் — வந்து ரயில் நிலையப்பகுதிக்கு வருமாறு கேட்கப்பட்டது.

அதேநேரம்— நாளை காங்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா| கைதடி நவில்ட் பாடசாலை

செவிப்புலன், விழிப்புலன் இழந்த சிறுவர்களுக்குக் கல்வி.

**புதிய மாணவர்களைச் சேர்த்தல் - 1997**

வயது;- **1997** தை **31** ஆம் திகதியன்று - **05** வயது நிறைவுற்றும், **10** வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பித்தல்:- உரிய விண்ணப்பப் படிவங்களை **05 - 04 - 1997** க்கு முன் 'அதிபர், நவீல்ட் பாடசாலை கைதடி என்ற முகவரியில் அஞ்சல் வழி மூலம் அல்லது நேரில் பெற்று விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
இறுதித் திகதி. **23 - 04 - 1997**

அதிபர்.

நவீல்ட் பாடசாலை,
கைதடி.

(சி/345)

## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த
உன்னத விவசாய உற்பத்தியாளர்

### செ. சீவரத்தினம்

அவர்களின் மரணச் செய்தி அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அவரது குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முந்திரிகைச் செய்கையாளர்கள்
உரும்பிராய்.

(45897)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி செல்வரத்தினம்

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

தாவடி தெற்கு, காலஞ்சென்ற (பன்னாலை) சின்னத்தம்பி — சீவரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் செல்வரத்தினம் பாண்டிச்சேரியில் 17-03-1997 காலை 8.00 மணியளவில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்புக் கணவரும், அபிராமியின் பாசமிகு தந்தையும், செல்வத்துரை (சுகாதாரப் பகுதி இளைப்பாறியவர்), செல்வநாயகி, காலஞ்சென்ற மகேந்திரன். செல்வநாயகம், சுந்தரலிங்கம் (உரிமையாளர்கள், செல்வம்ஸ் பற்றறி சேவிஸ்), செல்வராணி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற மருதநாயகம் (இ. போ. ச), தவமணி (இளைப்பாறிய ஆசிரியை), விஜயலக்சுமி, மாணிக்கவாசகர் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி, தர்மலிங்கம் (லிங்கம் ஸ்ரோர்ஸ், சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பாண்டிச்சேரியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. செல்வத்துரை,
சி. செல்வநாயகம்,
சி. சுந்தரலிங்கம்.
(சகோதரங்கள்)

(9410)

### செல்லையா சீவரத்தினம்

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த செல்லையா சீவரத்தினம் (முன்னாள் இ. போ. ச. ஊழியர்) 17-3-97 இல் சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா மற்றும் பாக்கியம் ஆகியோரின் பாசமிகு மகனும், நாகலிங்கம்—செல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், தர்சினி (தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில்), சுபாங்கனி (மாணவி, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி A/L 96), இராஜதீபன் (மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி A/L 98), சுபோதினி (மாணவி, ஆண்டு 9—வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசரத்தினம் (சேனா), இராசமணி, சபாரத்தினம் (யாழ். கமநல சேவைத் திணைக்களம்), அழகரத்தினம், நவமணி, விஷையரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வமணி, மாணிக்கவாசகர், தவகுலமணி, சிவமலர், கனகலிங்கம் (Chief Execcutive Precious Ind (Ptv) - Ltd, Colombo), சுகுணாதேவி ஆகியோரின் மைத்துனரும், கோண்டாவில் கோபாலசிங்கத்தின் சகலனும், இரத்தினேஸ்வரி, தங்கராசா, நடராசா, யோகராசா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், புவனேஸ்வரி, கோதநாயகி, புஸ்பராணி ஆகியோரின் உடன் பிறவாத சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 20-3-97 காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
செ.இராசரத்தினம்
(சகோதரர்)

உரும்பிராய் வடக்கு.

(45893)

## சமய சந்நிதிகளில்

யாழ். வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்கப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் நாளை காலை 9.00 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து பிற்பகல் 4.00 மணியளவில் மணவாளக் கோல உற்சவமும் இடம் பெறும்.

★ ★ ★

யாழ். புனித மரியாள் பேராலயத்தில் பரிசுத்த வார நிகழ்வுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை குருத்தோலை ஞாயிறுடன் ஆரம்பமாகின்றது. அன்று காலை 6.30 மணிக்கு முதலாம் திருப்பலியும், 8 மணிக்கு 2 ஆம் திருப்பலியும் மாலை 4.30 மணிக்கு 3 ஆம் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும்.

மறுநாள் திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு பேராலயத்தில் பரிசுத்த தைலங்களை ஆசீர்வதிக்கும்சடங்கும் திருப்பலியும் நடைபெறும்.

★ ★ ★

நீராவியடி அருள்மிகு தோப்பு மாணிக்கப்பிள்ளையார் கோயில்தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெறும். மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

★ ★ ★

நாயன்மார்கட்டு அருள்மிகு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நாளை மறுதினம்சனிக்கிழமைகாலை நடைபெறும். மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ஐ-111)

★ ★ ★

இணுவில் சிவகாமி அம்மன் ஆலய உற்சவத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை சப்பறத் திருவிழா நடைபெறவுள்ளது. (ஐ-30)

★ ★ ★

வியாபாரி மூலை ஸ்ரீபத்திரகாளி சமேத ஆதி சிவ வீரபத்திர சுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தில் நாளை வேட்டைத் திருவிழாவும், சப்பரத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ஐ 30)

★ ★ ★

நல்லை திருஞான சம்பந்தர் குரு மூர்த்த ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் குரு ஆசி வேண்டி வழிபாடுகள் பிராத்தனைகள் இடம் பெறும். ஸ்தல யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் இந்திய இந்து ஆலயங்களின் விபூதி பிரசாதங்கள் மற்றும் கங்கா தீர்த்தம் என்பனவற்றை அடியார்களுக்கு வழங்குவார்.

★ ★ ★

மூளாய் முத்துக்குமார சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் திங்கட்கிழமை பகல் 10.15 மணிக்கு நடைபெறவுள்ளது. சகல கிரியைகளும் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளன.

## வீடுகள் விற்பனைக்கு

பருத்தித்துறை கல்லூரி வீதி, வெஸ்லி ஒழுங்கையில் மூன்றரைப் பரப்புக் காணியில் சகல வசதிகளுமுள்ள நல்ல இரு கல் வீடுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
க. சிதம்பரப்பிள்ளை,
இளைப்பாறிய ஆசிரியர்,
கல்லூரி வீதி,
வெஸ்லி ஒழுங்கை,
பருத்தித்துறை.
அல்லது
க. கந்தையா
இளைப்பாறிய
[illegible]
[illegible]
பருத்தித்துறை.

(சி/ 343)

## தீக் காயத்தால் பெண் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 20
தீப்பற்றி எரிந்து படுகாயமடைந்து ஆபத்தான நிலையில், கடந்த வாரம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட வயோதிபப் பெண் ஒருவர் அங்கு மரணமானார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த சரவணை இளையபிள்ளை (வயது 72) என்பவரே உயிரிழந்தவராவர்.

மரண விசாரணையின்பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(இ-15)

## யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னாகம்.

## கலை வர்த்தக மாணவர் மன்றம்

**'வணிகநாதம்' 4 ஆவது மலர் வெளியீடு**

காலம்: **20 - 03 - 97 காலை 9 மணி**

இடம்: **கல்லூரி மண்டபம்.**

**பிரதம விருந்தினர்கள்.**

ஸ்கந்தாவின் மைந்தன்
திருமிகு. து. ரகு
(B.A., AIB., PGD in PUB- ADMIN.)
(முகாமையாளர், மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

திருமதி பத்மலோஜினி ரகு B. A. (Hons)
(பிரதேச உதவி முகாமையாளர், மக்கள் வங்கி தலைமையகம், யாழ்ப்பாணம்)

வாழ்த்துரை:-

திருமிகு. ஆ. கமலநாதன்
(கல்லூரி முதல்வர்)
திருமிகு கே. சோமசுந்தரம்
(இளைப்பாறிய மாவட்டக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி)
திருமிகு. அ. நடராசசுந்தரம்.
(உடுவில் கோட்டம்)

வெளியீட்டுரை: திருமிகு. இ. மருதலிங்கம்
(விரிவுரையாளர், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, பலாலி)

ஆய்வுரை: திருமிகு. க. அருள்வேல்
(சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)

நிறைவுரை: திருமிகு. ஆறு. திருமுருகன்
(ஆசிரியர். ஸ்கந்தா)

முதற் பிரதி பெறுபவர்: திருமிகு. இராசா குமாரசாமி

**அதிபரும்,**
**கலை வர்த்தக மாணவர் மன்றமும்.**

கந்தரோடை.

(45901)

## 33 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் தம்பிப்பிள்ளை பத்மநாதன்

எமது பீட சக மாணவி ப. பாமினியினுடைய தந்தை தம்பிப்பிள்ளை பத்மநாதன் அவர்களுடைய திடீர் மறைவையொட்டி அதிர்ச்சி அடைவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கும் இந்நாளில் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

முதலாம் வருட மாணவ மாணவிகள்,
இராமநாதன் நுண்கலைப்பீடம்.

(45899)

## பாஷாண உத்வாசனமும் சபிண்டீகரணமும்

தோற்றம்: 16 — 04 — 1919



மறைவு: 10 — 03 — 1997

அமரர்

### சிவஸ்ரீ சு. வேதாரணியக் குருக்கள்

(பிரதமகுரு, வல்வெட்டி வேவில்
வீரகத்தி விக்னேஸ்வரர் ஆலயம்.)

நிகழும் தாது வருட பங்குனி மாதம் 8 ஆம் நாள் (21- 03- 97) வெள்ளிக்கிழமை காலை 6. 00 மணிக்கு பாஷாண உத்வாசனமும் நண்பகல் 11. 00 மணிக்கு சபிண்டீகரணமும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், சபிண்டீகரணத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

வேவில், வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

(சி/ 346)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் பொது நூலகம்

★ மீளக்குடியேறி ஒரு வருடமாகிறது

# 48 ஆயிரம் குடும்பங்கள் ரூபா 5,000 பெறவில்லை!

## நிதி வரவில்லை எனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ். மாவட்டத்தில் மீளக் குடியேறிய 60 ஆயிரம் குடும்பங்களுக்கு மீளக் குடியமர்வு நிவாரணக் கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா வழங்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும் — இதுவரை 12 ஆயிரம் குடும்பங்களுக்கு மட்டுமே கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது.

யாழ். குடாநாட்டில் ''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையால் 95 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இடம்பெயர்ந்து பின்னர் 96 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மீளவும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பியுள்ள சுமார் 60 ஆயிரம் குடும்பங்களுக்கும் மீளக் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்க திட்டமிடப்பட்டது.

இவர்களுக்கு கொடுப்பனவு வழங்க போதிய நிதி வந்து சேராத காரணத்தால் 12 ஆயிரம் குடும்பங்களுக்கு மட்டுமே இதுவரை இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மீளக் குடியேறும் மக்களின் ஆரம்ப செலவுக்காகவழங்கப்படும் இந்தக் கொடுப்பனவு அவர்கள் மீளக் குடியமர்ந்து ஒரு வருட காலம் கடந்து விட்ட நிலையில் கூட வழங்கப்படவில்லை என்று மீளக் குடியேறிய குடும்பத்தினர் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை வன்னியில் இருந்து யாழ். திரும்பிய குடும்பங்களும் தமக்கு எந்த வித நிவாரணமும் கிடைக்கவில்லை என்று அங்கலாய்க்கிறார்கள். (ஐ-3)

15 ஆயிரம் பேரை ஏற்கனவே சேர்த்து விட்டோம்

# மேலும் 10 ஆயிரம் பேர் விரைவில் இராணுவத்துக்குச் சேர்க்கப்படுவர்

## போரை முடிக்க இதுவே வழி என்கிறார் ஜனாதிபதி

''இவ்வாண்டு இராணுவத்திற்கு 25 ஆயிரம் பேரைச் சேர்ப்பதற்குத் திட்டமிடப்பட்டது. இதில் 15 ஆயிரம் பேர் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளனர். எஞ்சிய 10 ஆயிரம் பேரும் விரைவில் சேர்க்கப்படவுள்ளனர்''

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வியாங்கொடையில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசியபோது முன்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமாயின் திட்டமிட்டபடி 25 ஆயிரம் பேர் இராணுவத்தில் சேர்க்கப்பட வேண்டும். இதேவேளையில் அரச ஊழியர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவுகளை அரசு வழங்க முடியாத நிலையிலுள்ளது. இது ஒரு தற்காலிக ஏற்பாடாகும்.

இராணுவத்தினர், பொலீஸார், ஆசிரியர்கள் உட்பட அரச சேவையிலுள்ள அனைத்து தரப்பினருக்கும் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் சில அரசாங்க ஊழியர்கள் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டது குறித்துக் குறை கூறுகிறார்கள். ஆனால் அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டது குறித்து எவரும் பிரஸ்தாபிப்பதில்லை.

— இவ்வாறு ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவித்தார்.

# பல சர்வதேச அமைப்புக்களின் அலுவலகங்கள் யாழ். நகரில்

## விரைவில் இயங்கத் தொடங்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 20

சர்வதேச தொண்டர் அமைப்புக்கள் பல யாழ். நகரில் தமது அலுவலகங்களைத் திறக்க நடவடிக்கை எடுத்துள்ளன.

எம். எஸ். எவ். எனப்படும் பிரான்ஸ் வைத்திய குழு, ''மேர்லின்'' பிரிட்டிஷ் வைத்திய குழு, ஐ.நா. அபிவிருத்தி திட்ட அமைப்பு, ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் ஆகியன தமது அலுவலகங்களைத் திறப்பதற்கான இடங்களைத் தெரிவு செய்துள்ளன.

இந்த அலுவலகங்களைத் தயார்ப்படுத்தும் பணிகளை அந்த அமைப்புக்கள் தற்சமயம் மேற்கொண்டு வருகின்றன.

இந்த அமைப்புக்களின் அலுவலகங்கள் விரைவில் செயற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் பல வெளிநாட்டு அமைப்புகள் யாழ். நகரில் தமது அலுவலகங்களை திறக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளன. (ஐ-3)

நூற்றாண்டு விழாவையொட்டி

# செல்வா நினைவுத் தூபி மெருகூட்டப்படுகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 20

தந்தை செல்வாவின் நூற்றாண்டு நினைவையொட்டி யாழ். முற்றவெளிப் பகுதியில் உள்ள தந்தை செல்வாவின் நினைவுத் தூபி புது மெருகூட்டப்பட்டு வருகிறது.

'புளொட்' அமைப்பின் யாழ். அலுவலகத்தினரால் மேற்கொள்ளப்படும் இந்தப் பணி இன்னும் சில தினங்களில் பூர்த்தியடையும்.

80 அடி உயரமான இந்த நினைவுத் தூபியில் சில திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, வர்ணம் பூசப்பட்டு மெருகூட்டப்படுகிறது.

நினைவுத் தூபி அமைந்துள்ள பகுதியும் புல், பூண்டுகள் வெட்டப்பட்டுத் தூய்மைப்படுத்தப்பட்டுள்ளது.

தந்தை செல்வாவின் 99 வயது நிறைவு தினம் எதிர் வரும் 31 ஆம் திகதியாகும். அன்றிலிருந்து அவரது நூற்றாண்டு விழாவுக்கான நிகழ்வுகள், ஏற்பாடுகள் ஆரம்பமாகும்.

(ஐ-3-135)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் கிராமசேவகர் பற்றாக்குறை

வடமராட்சி, மார்ச் 20

யாழ். மாவட்டத்தில் கிராம சேவையாளர்களுக்கு பற்றாக்குறை இருப்பதால் சில கிராமங்களுக்கு கிராம சேவையாளர்கள் நியமிக்கப்படவில்லை.

கிராம சேவையாளர்களில் பலர் வன்னிக்கும், வெளி நாடுகளுக்கும் சென்றுள்ளதாலேயே இப்பற்றாக்குறை இருப்பதாக தெரிகிறது.

சில இடங்களில் மூன்று பிரிவுகளுக்கு ஒரு கிராம சேவையாளர் கடமையாற்றி வருகின்றார். (ஐ-173)

## சீன அமைச்சர் ரஷ்யாவுக்கு விஜயம்

பீஜிங், மார்ச் 20

சீன வெளிநாட்டமைச்சர் கியான் கிச்சென் எதிர்வரும் 24 ஆம் திகதி ரஷ்யாவுக்கு விஜயம் செய்கிறார்.

இருநாடுகளுக்கும் இடையிலான 4 ஆயிரம் கிலோ மீற்றர் நீளமான பொது எல்லையில் துருப்புக்களின் எண்ணிக்கையைக் குறைப்பது சம்பந்தமான உடன்படிக்கை ஒன்றில் ரஷ்ய தலைவர்களுடன் அவர் கைச் சாத்திடவுள்ளார்.

(ஐ)

## ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் இஸ்ரேல் மீது கண்டனம்

ஜெருஸலேம், மார்ச் 20

கிழக்கு ஜெருஸலேமில் யூதக் குடியிருப்புகளை அமைக்கும் இஸ்ரேலின் திட்டம் குறித்து பல நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

கிழக்கு ஜெருஸலேமில் யூதக் குடியிருப்புகளை அமைக்கும் திட்டத்தின் முதற் கட்டமாக கடந்த செவ்வாயன்று இஸ்ரேல் அப்பகுதியில் நில அளவைப் பணிகளை ஆரம்பித்தது.

இந்தத்திட்டம் சட்டவிரோதமானது என்று பிரிட்டன் தெரிவித்துள்ளது. எட்டப்பட்ட உடன்பாடுகளை முற்றிலும் மீறுவதாக இத்திட்டம் அமைந்துள்ளது என பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தை இஸ்ரேல் உடனடியாகக் கைவிட வேண்டும் என ரஷ்யா கேட்டுள்ளது.

இஸ்ரேல் — பலஸ்தீன பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியஸ்தம் வகிக்கும் அமெரிக்கா, இஸ்ரேலின் திட்டத்தை அங்கீகரிக்கவில்லை எனவும் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் கடந்த வாரம் விடுத்த வேண்டுகோளை இஸ்ரேல் பிரதமர் கவனத்தில் எடுக்காதது மகிழ்ச்சி தரத்தக்கதல்ல எனவும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் இஸ்ரேலின் இத்திட்டத்திற்கு எதிராக வன்முறையில் இறங்குமாறு பலஸ்தீனர்களுக்கு யசீர் அரபாத் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகு தெரிவித்த கூற்றை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

யசீர் அரபாத் அவ்வாறு வேண்டுகோள் விடுத்ததற்கான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

(ஐ· 10)

★தனக்குப் பின்

## தனது சகோதரரை வாரிசாக அறிவித்தார் பிடல் காஸ்ட்ரோ

தனது வாரிசாகத் தனது சகோதரரர் றோல் காஸ்ட்ரோ தனக்குப்பின் தனது இடத்தை அலங்கரிப்பார் என்று அறிவித்திருக்கிறார் கியூப அதிபர் பிடல் காஸ்ட்ரோ.

"ஹெல்ம்ஸ் —பேர்டன்" எனப்படும் பொருளாதாரத் தடைச்சட்டத்தினை அமெரிக்கா கியூபா அதிபர் விதித்து ஒரு வருடம் கடந்து விட்டது.

இதுதொடர்பாகத் தனதுமாளிகையில் திரண்டிருந்த இராணுவ அதிகாரிகள் மத்தியில் பிடல் காஸ்ட்ரோ உரையாற்றினார். அப்போதே இத்தகவலை அவர் அறிவித்தார்.

''அமெரிக்கா விதித்த தடையால் நாங்கள் பாதிக்கப்படவில்லை; எங்கள் மண்ணில் இருந்தபடியே அமெரிக்காவுக்கு எதிராக நாங்கள் போராடுவோம்.''

''சண்டை இல்லாமல் எந்த ஒரு புரட்சியோ, சோஷலிஸமோ பயனளித்ததில்லை; எங்களால் இன்னும் துப்பாக்கி ஏந்திப் போரிட முடியும்; அமெரிக்கா எங்களது ஆயுதங்களைக் களைய விரும்பினால் நேருக்கு நேர் எம்முடன் மோதிப் பார்க்கட்டும்'' — என்று ஆக்ரோஷமாகத் தெரிவித்தார் காஸ்ட்ரோ

(ஐ)

## சந்தனக்கட்டை களஞ்சியத்தில் பெருந் தீ!

சென்னை, மார்ச் 20

ஆசியாவிலேயே மிகப் பெரிய சந்தன மரக்கட்டைக் களஞ்சியமான திருப்பத்தூர் அரச சந்தனமரக் கிடங்கில் ஏற்பட்ட மோசமான பெரும் தீ விபத்தினால் 68 கோடி ரூபா பெறுமதியான சந்தனக்கட்டைகள் தீயில் எரிந்து நாசமாகின.

சுமார் ஆயிரத்து 375 தொன் நிறையுடைய 65 ஆயிரம் சந்தனக் கட்டைகள் தீயில் எரிந்து நாசமாகிவிட்டதாக முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இந்த நாசகாரத் தீவிபத்துக்குறித்து உயர்மட்ட புலனாய்வு விசாரணைக்கு அவர் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# பஞ்சாப் எல்லையில் இரகசிய சுரங்க வழி

## இந்தியப் படையினர் கண்டுபிடிப்பு

பாகிஸ்தானுக்கும் வட இந்திய மாநிலமான பஞ்சாப்புக்கும் இடையிலான சுரங்கப் பாதை ஒன்றை இந்தியப் படையினர் தற்செயலாகக் கண்டுபிடித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

எல்லையோரம் உள்ள அய்லோலா என்ற நகரத்தில் கரையில் 34 மீற்றர் நீளமான இந்தச் சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டது.

பஞ்சாப் எல்லையின் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது இரகசிய சுரங்கப் பாதை இதுவே என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

★ காடுகளில் தேடுதல் தொடர்கிறது:

## 38 'அமாறு' கெரிலாக்கள் பெரு படையினரால் கைது!

72 பேரைக் கடந்த மூன்று மாதகாலமாகப் பணயக் கைதிகளாக வைத்திருக்கும் ''துபக் அமாறு'' புரட்சிகர இயக்கத்துக்கு எதிராக அமேசன் காடுகளில் நடத்தப்பட்ட தேடுதலின் போது 38 கெரிலாக்களைக் கைது செய்திருப்பதாக பெரு அரசு அறிவித்திருக்கிறது.

ஜப்பானியத் தூதரகத்தில் உள்ள கைதிகளை மீட்கப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கெரிலாக்களுக்கு எதிராக அரசபடைகள் மேற்கொண்ட முதலாவது எதிர்ப்பு நடவடிக்கை இதுவே ஆகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பணயக் கைதிகளை விடுவிப்பதாயின் சிறைகளில் உள்ள தங்கள் சகாக்கள் — விடுவிக்கப்பட வேண்டும் என்று 'அமாறு' போராளிகள் நிபந்தனை விதித்திருப்பது தெரிந்ததே. (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கப்பல் சேவைகள் அதிகரித்ததை அடுத்து

# பருத்தித்துறையில் இரவு வேளை பொருள்களை இறக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 20

குடாநாட்டுக்குப் பொருள்களை ஏற்றிவரும் கப்பல்களில் இருந்து துரிதமாக அவற்றை இறக்கி முடிக்க வசதியாக பருத்தித்துறை துறைமுகத்தில் இரவு நேரத்திலும் பணியை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பில் இருந்து அரச திணைக்களங்கள், தொண்டர் அமைப்புக்கள், தனியார் ப. நோ. கூ. சங்க அமைப்புக்கள் ஆகியவற்றுக்கான பொருள்களை வடக்கே எடுத்து வரத் தற்சமயம் கூடுதலான கப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

தற்சமயம் பருத்தித்துறை, காங்கேசன்துறை ஆகிய துறைமுகங்களில் பொருள்களை இறக்குவதில் பெரும் தாமதம் ஏற்படுவதால் அக்கப்பல்கள் பல வாரங்களாக பொருள்களுடன் கொழும்பு துறைமுகத்துக்கு வெளியேயும் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வெளியேயும் காத்துநிற்க வேண்டியுள்ளது.

இதன் காரணமாக கொழும்பில் கப்பலில் ஏற்றப்படும் பொருள்கள் யாழ்ப்பாணம் வந்து சேர சுமார் இரு மாத காலமும் செல்கிறது.

இதனால் கூடுதலான கப்பல் கட்டணத்தை செலுத்த வேண்டியும் — ஏற்படுகிறது.

பொருள்களைக் கொள்வனவு செய்த விலையிலும் பார்க்க பலமடங்கு கூட்டி அவற்றை விற்க வேண்டிய தேவையும் இதனால் ஏற்படுகிறது — என்று பொருள்களை எடுத்து வருவோர் தெரிவிக்கின்றனர்.

இது விடயமாக இவ்வார ஆரம்பத்தில் கொழும்பில் நடந்த மாநாடு ஒன்றிலும் ஆராயப்பட்டுள்ளது.

துரிதமாகப் பொருள்களை இறக்குவது தொடர்பாக எடுக்க வேண்டய நடவடிக்கைகள் குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்பட்டதாகத் தெரியவந்தது.

இந்த நடவடிக்கையின் ஓர் அங்கமாக, பருத்தித்துறை துறைமுகத்தில் இரவு நேரத்திலும் பொருள்கள் இறக்கும் பணி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிய வந்தது.

(ஐ-3)

## ஆஸ்பத்திரியின் தேவை குறித்து உயர் மட்டக் கலந்துரையாடல்

### டக்ளஸ் பங்குபற்றினார்

யாழ், ஆஸ்பத்திரி எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள், மற்றும் உடனடித் தேவைகள் சம்பந்தமாக யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த வாரம் உயர் மட்டக் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

யாழ். அரச அதிபரும், ஆஸ்பத்திரிப் பணிப்பாளரும் ஏற்பாடு செய்த இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டார்.

யாழ். ஆஸ்பத்திரி எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு காணப்பட வேண்டிய உடனடித் தீர்வுகள் குறித்து அங்கு விரிவாக ஆராயப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரிக்கு நியமனம் பெறும் 70 சிற்றூழியர்களுக்கான நியமனப் பத்திரங்கள் கலந்துரையாடலின் பின்னர் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டன. (ஐ-3)

### பன்றித்தலைச்சி பொங்கல் உற்சவம்

## சைக்கிளில் ஐஸ்பழம் விற்க ஆலயச் சூழலில் தடை

மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் கோயில் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தின் போது சைக்கிளில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலய வீதியில் உணவுவகைகளை விற்பனை செய்வோர் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியின் முன் அனுமதிபெறல் வேண்டும்.

ஆலய உற்சவம் தொடர்பாக தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நடந்த செயலக பிரதம எழுதுநர் செ. வேலாயுதபிள்ளை தலைமையிலான ஆலோசனைக் கூட்டத்தில் மேற்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

பொங்கல் உற்சவம் பி. ப. 5.00 மணியுடன் முடிவடைவதால் ஆலய வீதியில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து தற்காலிகக் கடைகளும் 5. 30 மணிக்கு முன்னர் மூடப்படல் வேண்டுமெனவும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடி தண்ணீர் உழவு இயந்திரம் மூலமும் பவுஸர்கள் மூலமும் ஆலய பரிபாலன சபையினரால் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## யோகர் சுவாமி குரு பூசை நிகழ்ச்சி

கொழும்புத்துறை, மார்ச் 20

யோகர் சுவாமி குரு பூசை நிகழ்ச்சிகள் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. இந்து மாணவர் மன்ற ஏற்பாட்டில் நடைபெறும் இந் நிகழ்ச்சிக்கு அதிபர் சி. ஆ. சோதிலிங்கம் தலைமை வகிப்பார்.

(ஐ-80)

### யாழ். கல்வி வலயங்களில்

## சுமார் 500 ஆங்கில ஆசிரியர் பதவிகள் வெற்றிடமாக உள்ளன

பருத்தித்துறை, மார்ச் 20

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது.

தற்போது யாழ். வலயம் இரண்டிற்குட்பட்ட பாடசாலைகளில் 235 ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன.

இதே போல யாழ். வலயம் ஒன்றில் 250 க்கு மேற்பட்ட ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையாகவுள்ளனர் எனத் தெரிகிறது.

இப் பற்றாக்குறையை தற்காலிகமாகப் போக்குவதற்கு பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு மாகாண கல்வி அமைச்சின் அங்கீகாரம் இதுவரை கிடைக்கவில்லை. இருப்பினும் இம் மாத முடிவிற்குள் வட பகுதியிலுள்ள ஓய்வு பெற்ற அரச ஊழியர்களில் இருந்தும், ஆங்கில பாடத்தில் கூடிய தேர்ச்சி பெற்றவர்களில் [illegible] ம் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படவுள்ளார்கள்.

இதுவரை விண்ணப்பங்களை அனுப்பாதவர்கள் உடனடியாக தத்தம் கோட்டங்கள் ஊடாக விண்ணப்பிக்கலாம் எனக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-118)

## பிரெஞ்சுக்குழு

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பகுதிகளில் உள்ள விவசாய உற்பத்திப் பகுதிகளை யாழ்ப்பாணம் வந்திருந்த பிரெஞ்சுக் குழுவினர் பார்வையிட்டனர்.

இப்பகுதியில் விவசாயம் மேற்கொள்ளும் இடங்களையும் அல்லாரை, கச்சாய் ஆகிய பகுதிகளில் உள்ள பழமர நாற்று மேடைகளையும் இவர்கள் பார்வையிட்டனர்.

(117)

## யாழ்.- பளை பஸ் சேவையில் பயணிகளுக்கு இடநெருக்கடி

### மேலதிக சேவை நடத்தக் கோரிக்கை

தென்மராட்சி மார்ச் 20

யாழ்ப்பாணத்திலிருந்து பளை வரையிலான 769 இலக்க பஸ் மார்க்கத்தில் குறைந்த எண்ணிக்கையான பஸ் சேவைகளே நடத்தப்படுவதால் தினமும் பெருமளவு பயணிகள் வீதிகளிலும் பஸ் நிலையங்களிலும் காத்திருப்பதைக் காண முடிகிறது.

சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களுடன் தென்மராட்சி சிற்றூர்திச் சேவைகள் சங்கத்தின் மினிபஸ்களும் அடிக்கடி சேவையிலீடுபடுவதால் இப்பகுதி பயணிகள் எதுவித சிரமுமின்றி பயணத்தை மேற்கொள்கின்றனர்.

ஆனால் சாவகச்சேரியிலிருந்து பளைக்கு ஒரு சில பஸ்களே சேவையிலீடுபடுவதால் பெருமளவு பயணிகள் தமது பயணங்களை உரிய வேளையில் மேற் கொள்ள முடிவதில்லை.

யாழ் பஸ் நிலையத்திலிருந்து பளைக்கான பஸ்சேவை காலை 7.00 மணிக்குப் பின்னர் பி.ப. 2. 00 மணிக்குரே நடத்தப்படுவதால் தினமும் பளைக்குப் புறப்படும் பஸ்ஸில் இருநூறுக்கு மேற்பட்ட பயணிகள் பெரும் சிரமத்தின் மத்தியில் பயணத்தை மேற் கொள்கின்றனர்.

யாழ்ப்பாணத்திற்கு செல்லும் நோயாளர்கள், அரச ஊழியர்கள், பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள் இந்த பஸ்ஸையே நம்பித் தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்,

யாழ். பஸ்நிலையத்திலேயே பயணிகளால் பஸ் நிரம்பி விடும். இதனால் வழியில் பஸ்ஸை எதிர்பார்த்து நிற்கும் பயணிகள் இப் பஸ்ஸில் ஏற முடியாத நிலை ஏற்படுகிறது.

பிற்பகலில் 769 இலக்க பஸ் மார்க்கத்தில் கூடுதலான பஸ் சேவை நடத்துமாறு பபணிகள் பலர் கோருகின்றனர்.

(ஐ-117)

# கிறிஸ்தவரின் தனித்துவம் பேண உதவியவர் சுவாமி ஞானப்பிரகாசர்

### நினைவு விழாவில் உரை

வடமராட்சி, மார்ச் 19

கிறிஸ்தவர்கள் ஏனைய மதத்தவர்களுடன் இணைந்து தன்மானமாக சரிநிகர் சமானமாக தனித்துவத்துடன் வாழ சுவாமி ஞானப்பிரகாசரின் ஆய்வுப் பணி பெரிதும் உதவியது.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் வண. பிதா இ ம. ஜெயசீலன் அடிகள் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அமரத்துவம் அடைந்த 50 ஆவது ஆண்டு நிறைவுதின விழா அண்மையில் யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் யாழ். மறைக் கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜெயசீலன் அடிகள் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

பன்மொழிப் புலவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் குருத்துவ வாழ்வை தாசர் நிலை, புத்திரர் நிலை, சிநேக நிலை, யோக நிலை என்று வகுக்கலாம். ''ஆரம்ப நிலையில் மருதமடு யாத்திரைக் கைத் துணை'' என்ற சிறிய பிரசுரத்தை அவர். வெளியிட்டார். யோக நிலையில், அதாவது பக்குவப்பட்ட நிலையில் ஒப்பியல் அகராதி, கிறிஸ்து நாதர் சரித்திர ஆராய்ச்சி ஆகிய ஆய்வுக்களஞ்சியங்களையும் உருவாக்கினார்'

இந்த மண்ணில் கிறிஸ்தவ மறையை அரிக்கேன்லாம்புகளுடன் கால்நடையாகச் சென்று பரப்பினார் ஏழை மக்கள் குறிப்பாக சாதிக் கொடுமையினால் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட பாமரமக்கள் மத்தியில்பணி புரிந்தார் அவர்களின் கல்வி வளர்ச்சிக்காக கல்விக்கூடங்களை உருவாக்கினார். — என்றார். சேவியர் அடிகள் தனது உரையில் தெரிவித்ததாவது:-

கிறிஸ்தவமும் தமிழ் மொழியும் தழைத்தோங்கப் பல்வேறு பணிகளைச் செய்தவர் சுவாமி ஞானப்பிரகாசர் இவரின் சிறியதந்தையார் தம்பிமுத்துப்புலவர் இவருக்குப் 14 வயதான போது இந்தியாவுக்குப் போய் சில காலம் [illegible] வேண்டி ஏற்பட்டது. அந்த நேரம் தம்பிமுத்தர் வெளியிட்ட ''சன்மார்க்க போதினி'' என்ற சஞ்சிகைக்கு அவர் ஆசிரியராகவும் இருந்துள்ளார். அதன் மூலம் தமிழ் இலக்கிய ஆய்வுகளை மேற்கொண்டார்.

செபப்புத்தகங்கள், வழிபாட்டுக் கையேடுகள், தர்க்கப்பிரசுரங்கள், ''அமலோற்பவ தூதன்'' என்ற மாத இதழ், ''பாதுகாவலன்'' வார இதழ், துண்டுப் பிரசுரங்கள் முதல் அகராதி வரை தனியொருவராக நின்று தயாரித்து வெளியிட்ட செம்மல் ஞானப்பிரகாசர் சுவாமிகள்— என்று தெரிவித்தார்,

யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை, பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி துணை அதிபர் திரு. துரை ஆரோக்கிய தாசன், கொழும்புத் துறை சென். யோசப் வித்தியாலய அதிபர் திரு. பெனடிக்ற் ஆகியோரும் உரையாற்றினர்.

சுவாமி ஞானப் பிரகாசர் எழுதிய நூல்களின் கண்காட்சியும் அங்கு இடம் பெற்றது.

அவரின் வாழ்க்கை வரலாற்றைக் குறிக்கும் [illegible] என்ற [illegible] எழுதிய நூலும் அங்கு வெளியிடப்பட்டது. (ஐ-173)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் செல்லையா மயில்வாகனம்

(நவாலி வடக்கு நாச்சிமார் முருகன் ஆலய தர்மகர்த்தா சபையின் தலைவர்)

அன்னாரின் மறைவால் துயர் கொண்டிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சி. சிவகுமார் குடும்பத்தினர்.**
(உப தலைவர்)

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(9408)

யாழ்ப்பாணம்
பனை தென்னை வள
அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

## விசேட பொதுக்கூட்டம்

**26 - 03 - 1997**

எதிர்வரும் 26-03-97 இல் நடைபெறவிருக்கும் விசேட பொதுக்கூட்ட நிகழ்ச்சி நிரல் கிடைக்காத பொதுச்சபை உறுப்பினர்ளைகசங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**சி. குணரட்ணம்,** தலைவர்

**ப. கனகலிங்கம்,** செயலாளர்.

330, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
19-03-97.

(45892)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# யாழ்ப்பாணத்தின் ஞானதீபமாக ஒளிர்பவர் யோகர் சுவாமிகள்

தேரடிச் சித்தர் செல்லப் பரையும். ஈழத்து நல்லூரான் திருவடியையும், யாழ்ப்பாண மண்ணின் மகத்துவத்தையும், உலகத்தோர் இனிதே உவக்கும்படி தனித்துவமாக்கியவர்தான் யோகர் சுவாமிகள். தாம் பெற்ற அருள் என்னும் பெருவளத்தை பெறாதவருக்கு அறிவுறுத்தி, ''சீரும்திருவும்'' பெறவைத்த சிவயோகச் செல்வரின் சிறப்பைத் தவயோகிகளும் சொல்வது அரிது. ஈழநல்லூர்க் கந்தன் ஆலயத் தேரடியிலுள்ள கூவிள மரத்தின் குளிர் நிழலிலே, தேரடிச் சித்தர் செல்லப்பா குருவாய் எழுந்தருளி, யோகர் அவர்களைத் தமது மெய்ஞ்ஞானப் புலத்தினுள் ஈர்த்துக் கொண்டார்.

''முச்சந்திக் குப்பையிலே'' குண்டுமணிபோல் முடங்கிக் கிடக்கும் தன்மையினரான செல்லப்பர் யோகரைக்கண்டதும் ''ஆரடா நீ''? ''தேரடாவுள்,'' ''தீரடாபற்று'' 'தேரடாபற்று' என்ற மணிவாக்குகளைத் திருவாய் மலர்ந்தார். இந்த வார்த்தைகள் யோகரின் வாழ்க்கைப் போக்கை மாற்றிவிட்டன. தன்னை மறந்தார்; குருதேவரின் இன்னமுதாம் ஞான அமுதை உண்டு வண்ணமுறத்தெய்வ வளத்தை வாரி இறைத்துக் கருணை பூக்கவும் தீமைகாயவும் செய்தார்; செய்வித்தார்.

சற்குரு தரிசனத்தையும் அதன் விளைவுகளையும் பற்றி சுவாமிகள் கூறும்போது, '' இருவரும் தேடிக் காணா இறைவன் என்போல் உருத்தாங்கி இறங்கி எவரும் வணங்கும் நல்லையில் இன்னான் இவனென்ன ஒருவருமறியா தேரடியுலாவி, உவகை பூத்த முகத்தினராய்,ஒருநாள் என்றன உற்று நோக்கி ஒரு பொல்லாப்புமில்லை யென்று, அருவமும் காட்டி உருவமும் காட்டி, அப்பாற்கப்பாலாம் அருள் நிலை காட்டிக் காட்டிக் காட்டி அந்தம் ஆதி இலாச் சொருபமுங் காட்டிச் சும்மாவிருக்கும் சூட்சத்தில் மாட்டிவிட்டான். துன்பம் இறந்தன: இன்பம் இறந்தன; சோதி, சோதி, சிவ சோதி'' என்று தன் அனுபவத்தை வெளிப்படுத்தினார்,

யோகர் சுவாமி அவர்களை அறிந்தவர்கள்,புரிந்தவர்கள், பழகியவர்கள் அவரின் ஞான காந்தப் புலத்துள் ஈர்க்கப் பட்டவர்கள் ஈர்க்கப்பட்டவர்களால் ஈர்க்கப்பட்டவர்கள் என்போர், இலங்கை, இந்தியா மற்றும் உலகின் பல்வேறு நாடுகளிலும், பரவியிருந்து - செல்லப்பா யோகர் திருவருட்பெருக்கில் திளைக்கின்றனர், சிவத்தொண்டர்களாகித் திருக்கூட்டத்தில் வாழையடி வாழையாக வேளைதவறாது வாழ்த்தியும், நினைத்தும் அவர்கள் திருவுருவங்கள் சமாதிகளின் முன்பு தலைகளைத் தாழ்த்தியும் அச்சித்தர்களின் சிந்தனைகளுக்கு, உருவும் திருவும் தருகின்றனர்.

காவி உடுத்திடாமல் கமண்டலம் எடுத்திடாமல் துறவு பூண்ட முனிபுங்கவராகிய யோகர் சுவாமிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஞான தீபமாகத் திகழ்ந்தார்.

சித்த புருஷர்களில் பலர் பெரும்பாலும் சமூகத்தில் இருந்து ஒதுங்கியே வாழ்ந்தார்கள். தாமரை இலைத் தண்ணீர்போல சமுதாயத்துடன் ஒட்டியும் ஒட்டாமலும் சித்த புருஷர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் யோகர் சுவாமிகள் சித்த புருஷராக மாறிய பின்பு சமய பரிபாலனமும் செய்து வந்தார். யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையிலும், மட்டக்களப்பு செங்கலடியிலும் சிவதொண்டர் நிலையங்களை அமைத்து சமயப் பணி புரிந்து வந்தார். சிவதொண்டன் என்னும் சமய சஞ்சிகையை ஆரம்பித்து வைத்தார். செல்லப்பா சுவாமிகள் தன்னை ஆட்கொண்ட சிறப்பை,

என்னையெனக்கறிவித்தான்
எங்கள் குருநாதன்
இணையடியென்
தலைவைத்தான் எங்கள்
குருநாதன்
அன்னை பிதா குருவானான்
எங்கள் குருநாதன்
அவனியெலாம்
ஆளவந்தான்
எங்கள் குருநாதன்

என்று நற்சிந்தனைப் பாடலில் குறிப்பிடுகிறார். நல்லூர்க் கந்தனின் திருவருளின் சிறப்பை யோகர் சுவாமிகள் நன்கு உணர்ந்திருந்தார்.

நல்லூரான் திருவடியை
நான் நினைத்த
மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி
கிளியே
இரவு பகல் காணேனடி



சிவதொண்டன் நிலையத்தில் சேரீர்
சிவயோகர் திருவுருவைப் பாரீர்
அவதார மகிமையினைத் தேரீர்
அவரன்பைப் பெற்றுக் கடைத் தேறீர்!

— முருகனடியான்

என்று பாடி நல்லூரானின் பெருமையை நாம் அனைவரும் அறியவும் உணரவும் வைத்த பெருமை யோகர் சுவாமிகளுக்கே உண்டு.

நமது உலகியல் வாழ்க்கையிலே பலவிதமான சோதனைகள், வேதனைகள் ஏற்படும் எத்தகைய துன்பங்கள் துயரங்கள் வந்தாலும் நல்லைக் கந்தனின் திருவருள் நம்மையெல்லாம் காப்பாற்றும் என்பதனை,

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவோமோ நாங்களடி
கிளியே
ஆறுமுகன் தஞ்சமடி.

— என்ற யோகர் சுவாமிகளின் பாடல் தெளிவாக விளக்கிக் காட்டுகிறது.

யோகர் சுவாமிகளது அருட்சக்தி இன்றும் நம்மிடையே பெருகி ஓடுகிறது. சற்று நிதானமாக சிவத்தியானம் செய்து இதனை அறிதல்தான் நாம் செய்ய வேண்டிய தலையாய கடமையாகும்.

சுவாமிகள் சாதனை செய்ய வேண்டும் என்று அடிக்கடி சொல்லுவார். சாதனைக்கு பெரிதும் துணை இருக்கும்? ஆன்மீக நலனின் பொருட்டு தனிமையான வாழ்வும் எல்லோரிடமும் அன்பும் கொண்டிரு. நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே. ஆகையால் நாம் அவருடைய உடைமை. அவருடைய அடிமை. நம்முடைய அசைவெல்லாம் அவருடைய அசைவே. நாம் அவரை ஒருபோதும் மறந்திருக்க முடியாது. நாம் கீழ்மையான குணங்களைப் போக்கி மேலான தெய்வ

புரிவது குருபக்தி. தனது குருநாதனாகிய செல்லப்பா சுவாமிகளிடம் மட்டில்லா அன்பும் பக்தியும் சுவாமிகள் கொண்டிருந்தார். நாமும் இவ் அளப்பரிய புண்ணிய தினத்தில் இவரை நமது அகத்தில் இருத்தி தியானித்து மேன்மையும் பேரின்பமும் அடைவோமாக.

### தொகுப்புக் கட்டுரை

நயினை நா. க. சண்முகநாதபிள்ளை, சிவ. மகாலிங்கம், சுவாமி சித்ருபானந்தா, கா. கணேச தாசன் ஆகியோர் யோகர் சுவாமிகள் குறித்து எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இது.

'ஆசான் அருளால்
அகந்தை அழிந்தது
ஆசான் அருளால்
அகங்கு ளிர்ந்தது
ஆசான் அருளால்
அன்பு வளர்ந்தது
ஆசான் அருளால்
ஆசானைக் கண்டிலன்.'

''தீமையைத் தவிர்; நன்மை செய்யப் பழகு; மனதைத்தூய்மையாக்கு, எவரையும் வெறுக்காதே, யாவருக்கும் தீங்கிழைக்காதே. எனக்கு இனிமையற்ற ஒன்று மற்றவருக்கும் இனிமை அற்றதாகத் தானே தத்துவத்தை அடைய வேண்டும்.'' இதுவும் சிவயோக சுவாமிகளின் அருள் வாக்காகும்.

மேலும் சுவாமிகள் அருளிச் செய்த அற்புதமான ''நற்சிந்தனை''ச் செய்யுள்கள் மூலம் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டினார். கண் கண்ட ஒரு நடமாடும் தெய்வமாக விளங்கி அருட்சித்துகள் பல செய்து, பக்தி வழியை விளக்கி முத்தி நெறி காட்டிய வித்தகச் சித்தர் இவரேயாவார்.

**நான் யார்?**

நான் யார்? இறைவன் என்னை ஏன் படைத்தான்? நான் வாழ்வது எதற்காக? வீணாக என்னைஏன் படைத்தாய்? என்ற வினாக்களுக்கு பின்வருமாறு விடை கூறினார்.

''நீ உடப்பன்று.மனமன்று. புத்தியன்று சித்தமன்று. நீ ஆத்மா. ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக் கடவது. ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது தரும நெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் முன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறமும் உள்ளவர். நானே அவன்,அவனே நான் என்று உணர்வாயாக'' என்ற அவரது போதனை என்றும் எம் இதயத்தை விட்டு நீங்காது.

இன்றைய யோகர் சுவாமிகளின் குருபூசைத்தினத்திலே யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலே உள்ள சிவ தொண்டன் நிலையத்தில், தமிழ்நாடு சிதம்பரத்தில் உருவாக்கப்பட்ட, யோகர் சுவாமிகளின் திருவுருவச் சிலை பிரதிஷ்டை செய்யப் பட இருப்பது பரிபூரண திருவருட்கடாட்சத்தை யாழ்ப்பாண மக்களுக்கு அளிப்பதாகும். சுவாமிகள் பிறந்து 125 ஆண்டுகளும், இறந்து 33 ஆண்டுகளும் பூர்த்தியாகின்றன. அவருடையதும், செல்லப்பா சுவாமிகளதுமான சிந்தனைப் புதையல்கள், என்றும் இறவாத இன்பவாழ்வில் மக்களை வழிப்படுத்த வேண்டுமெனப் பிரார்த்திப்போம். அவர்களைத் துதிப்போர்க்கு வல்வினை போம். ★

---

### திருவுருவச் சிலை பிரதிஷ்டை

தவத்திரு யோகர் சுவாமிகளின் குருபூசை ஆயிலிய நட்சத்திரமாகிய இன்றாகும். சுவாமிகளின் திருவுருவச் சிலை வண்ணார்பண்ணை, காங்கேசன்துறை வீதியில் உள்ள சிவதொண்டன் நிலையத்தில் இன்று முற்பகல் 8-30 மணிக்குப் பிரதிஷ்டை செய்யப்படும். அதனைத் தொடர்ந்து திருவடி அபிஷேகமும், குருபூசையும் நிகழும். நிறைவாக மகேஸ்வர பூசை நடைபெறும்.

---

## சாவகச்சேரி சந்தையில் மரக்கறி விலைகள் பெரும் வீழ்ச்சி

தென்மராட்சி, மார்ச் 20

சாவகச்சேரி சந்தையில் மரக்கறி வகைகளின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன. உருளைக்கிழங்கு தவிர்ந்த ஏனைய மரக்கறிகளின் விலைகள் ஒரு கிலோ பத்து ரூபாவும் அதற்குக் குறைவாகவும் நேற்று முன்தினம் சந்தையில் விற்பனையாகின.

கரட், கறிமிளகாய், வெண்டிக்காய் ஆகியவை கிலோ பத்து ரூபாவாகவும், கத்தரிக்காய், கோவா, தக்காளிப் பழம் என்பன கிலோ ஏழு ரூபாவாகவும், பாவற்காய் கிலோ எட்டு ரூபாவாகவும் பீற்றூட், பயிற்றங்காய், பூசனி ஆகியவை கிலோ ஐந்து ரூபாவாகவும், பச்சை மிளகாய் கிலோ 16 ரூபாவாகவும், வெங்காயம் கிலோ 20 ரூபாவாகவும், உருளைக் கிழங்கு கிலோ 25 ரூபாவாகவும் விற்பனை செய்யப் பட்டன.

தென்மராட்சி, பச்சிலைப் பள்ளி, வலிகாமம், வடமராட்சி ஆகிய பகுதிகளிலிருந்து பெருமளவு மரக்கறி வகைகள் சாவகச்சேரி சந்தைக்கு வருகின்றன.

(ஐ-117)

## தவக்காலச் சிந்தனை

**(37 ஆம் நாள் — வியாழன்)**

நம்முடைய உலக வாழ்வானது சாவுக்கும் வாழ்வுக்கும் இடையிலான போராட்டமாகும். இஸ்ராயேல் மக்கள் பல வேளைகளில் தம்முடைய இறைவனை மறந்து வாழ்ந்திருந்தார்கள். இறைவனுடைய உறவிலிருந்துவிலகி. வாழ்வது தான் பாவம். பாவத்தின் சம்பளம் மரணம் எனப்படுகின்றது. ஆனால் இயேசுகூறுகின்றார்: ''ஒருவன் என் வார்த்தையைக் கடைப்பிடிப்பானாகில் என்றுமே சாகான்'' (அரு.8:51).

நாம் பல வேளைகளில் நடைப் பிணங்களாகவே வாழ்கின்றோம். சமூக அநீதிகள் நடைபெறும்போதும், அதற்கு ஒத்தாசை புரியும் போதும் தீமையின் ஆதிக்கத்துக்கு உட்படுகின்றோம். அப்போது நாமும் செத்தவர்களே. இறை வார்த்தை உயிருள்ள பட்டயம். இரு பக்கமும் கூர்மையானது. இறைவார்த்தையை எம் கேடயமாக்குவோம். அதன் ஆற்றலால் தீமையை வெல்லலாம். கடைப்பிடிக்கத் தயாரா?

- அ. பீற்றர் ராஜன்

## கொக்குவில் இந்துவில் பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், மார்ச் 20

கொக்குவில் இந்துக் கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவின்உள்ளூர் உற்பத்தி, அலங்கார வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஏப்ரல் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மேற்படி பயிற்சி வகுப்புகளுக்கான விண்ணப்பமுடிவு தினம் எதிர்வரும் 31 ஆம் திகதி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூக்கள், வாழைநார் பொருள்கள்,கோலம், தலையலங்காரம், ஒட்டுச் சித்திரம் பிளாஸ்ரிக் அலங்கார உருவங்கள், சுவர் அலங்காரப் பொருள்கள்,சிகைஅலங்காரப் பொருள்கள் ஆகியவற்றுக்கான இவ்வகுப்புகள் 6 மாதங்கள் நடைபெறும். பாடசாலையை விட்டுவிலகியோர் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

(ஐ-4)

## உடற்பயிற்சி போட்டிகள்

பருத்தித்துறை,மார்ச் 20

பருத்தித்துறை, கரவெட்டி, கோப்பாய் ஆகிய கல்விக் கோட்டங்களை உள்ளடக்கிய யாழ். வலயம் இரண்டின் உப வலய உடற் பயிற்சிப் போட்டி நாளை வெள்ளிக் கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

கோட்ட மட்டங்களில் முதல் மூன்று இடங்கலள பெற்ற 17 வயது, 19 வயது, ஆண் பெண் இரு அணிகளையும் அங்கு சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. இப் போட்டியின் பிரதம விருந்தினராக யாழ். வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் திரு. சி. சிவராசா கலந்துகொள்ளவுள்ளார்.

(ஐ-118)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கூரை ஒடு 50 விற்பனைக்குண்டு. ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (வண்ணை சிவன் சந்தி)
(45858)

உறுதியான Indian Iron Safe (இரும்புப் பெட்டி) 5' x 3' விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி N. கோபாலகிருஷ்ணன் நுணாவில் சந்தி, சாவகச்சேரி.
(45884)

### வீடு விற்பனைக்கு

சகல வசதிகளுடைய வீட்டுடன் கூடிய 3 பரப்புக்காணி, மா, பலா, தென்னையுடன் டச்சு வீதி, சாவகச்சேரியில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இ. சண்முகராசா. இராக்குச்சி அம்மன் வீதி, சங்கத்தானை. (பஞ்சாபிகேசன் வீட்டிற்கு முன்பாக) (45885)

### தவறிவிட்டது

வீரசிங்கம் விக்னேஸ்வரன் ஆகிய எனது அடையாள அட்டை 710712271V புன்னாலைக்கட்டுவன் சந்திக்கும், மல்லாகம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ராஜ்குமார் பல்பொருள் வர்த்தக நிலையம், ஏழாலை தெற்கு என்னும் முகவரியில் தயவு செய்துஒப்படைத்துஉதவவும்.
[45880]

### ஜோதிடம்

எத்தகையதிராத பிரச்சினைகளும் தீர ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். சாதகத்துடன் வரவும். பொய்யா மொழி ஜோதிடம், ஸ்ரீவீரமாகாளிஅம்மன் கோயிலடி, 140, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(45782)

## யாழ். வாசி திருமலையில் கைது

யாழ்ப்பாணத்துக்கு தடை செய்யப்பட்ட பொருள்களை எடுத்துச் செல்ல முயன்ற யாழ். வாசி ஒருவர் திருகோணமலை துறைமுகப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

இவர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார். என்று இலங்கை வானொலி தெரிவித்தது. (ஐ-3)

## விசேட அ. அட்டை விநியோகம்

சுழிபுரம் கிழக்கு பண்ணாகம், பனிப்புலம் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கான விசேட அடையாள அட்டைகள் இன்று வியாழன் காலை 9 மணி முதல் சுழிபுரம் கிழக்கு கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுமென வலி. மேற்கு சங்கானை பிரதேச செயலர் கே. சந்திரராசா அறிவித்துள்ளார்.
(ஐ-100)

## அருளம்பலம் காலமானார்

நல்லூர்த் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ். மாவட்ட முன்னாள் அரசியல் அதிகாரியுமான சின்னையா அருளம்பலம் அமெரிக்காவில் கலிபோனியாவில் காலமானார்.

அவரது இறுதிச் சடங்குகள் நேற்று கலிபோனியாவில் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது. (ஐ-111)

---

நாரந்தனை - சரவணை கர்ணன் தோட்டம்

## ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோயில் சம்புரோச்சன கும்பாபிஷேகம்

நிகழும் மங்களகரமான தாதுவருஷம் பங்குனித் திங்கள் 10ஆம் நாள் (**23-3-1997**) ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 — 10-30 மணிக்கிடையில் பூரணையும் உத்தர நட்சத்திரமும் கூடிய சுபவேளையில் முருகப் பெருமானுக்கு சம்புரோச்சன கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்திருப்பதால் அத்தருணம் முருகனடியார்கள் இவ்விழாவில் கலந்து இறையருள் பெற்றேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**க. நடராசா**
தலைவர்
ஆலய பரிபாலன சபையினர் சார்பில்.

(45887)

---

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
நீர்வேலி

## கேள்வி அறிவித்தல்

### அச்சுவேலி பொதுச்சந்தையில் கட்டப்பட்டுள்ள கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை

1. அச்சுவேலி பொதுச் சந்தையில் கட்டப்பட்டுள்ள 14 கடைகளிலும், வியாபாரம் செய்யும் உரிமைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து 09-04-1997 ஆந் திகதி பிற்பகல் 2.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.
2. கேள்விப் பத்திரங்கள் 05-04-1997 ஆந் திகதி பிற்பகல் 2-00 மணி வரை, கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூபா 250/உம், மீளளிப்புச் செய்யப்படும் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 5,000/உம் செலுத்துபவர்களுக்கே வழங்கப்படும்.
3. நிரப்பப்பட்ட கேள்விகள் குறிக்கப்பட்ட தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக ''விசேட ஆணையாளர், வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி'' என முகவரியிடப்பட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் ''கடைகளுக்கான கேள்வி'' எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது இச்சபையின் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடப்படுதல் வேண்டும்.
4. தற்போது இப்பிரதேச சபையின் கடைகளில் ஏதாவது ஒன்றின் பதிவு செய்யப்பட்ட வாடகைக்காரராக இருப்பவருக்கோ அல்லது அன்னாரது கணவன்/மனைவி அவரின் குடும்பத்தவர் எவருக்கேனும், கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது.
5. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் சபையினால் அங்கீகரிக்கப்படும் முறையிலான கதவுகளைத் தங்களது செலவில் தயாரித்துப் பொருத்துதல் வேண்டும்.
6. கடைகளைத் தெரிவு செய்யும் முன்னுரிமை கூடிய கேள்வி அடிப்படையில் வழங்கப்படும்.
7. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் கடையைப் பொறுப்பேற்காதுவிடின் அவரது கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
8. ஒருவர் ஒரு கேள்விக்கு மேல் சமர்ப்பிக்க முடியாது.
9. மேற்படி கடைகளில் கீழ்வரும் வியாபாரங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.
   - (அ) தேநீர்க்கடை/சாப்பாட்டுக்கடை
   - (ஆ) மீன்/இறைச்சி/கருவாடு/இறால்/மரக்கறி வகை விற்பனை செய்தல்.
10. தெரிவு செய்யப்பட்ட கடையின் வாடகைக்காரர் தனது கடையை வேறெவருக்கும் கைபரிமாறலாகாது. அப்படி கைபரிமாறியது நிரூபிக்கப்படுமிடத்து உரிமை நீக்கப்படுவதுடன் வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
11. கேள்விகளை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ சபைக்கு பூரண அதிகாரமுண்டு.
12. ஒவ்வொரு கடையின் ஆகக்குறைந்த கேள்வித் தொகை:
    இல. 1—7 வரை ரூபா 50,000/-
    இல. 8—14 வரை ரூபா 40,000/-
13. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை இவ் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**கதிரவேலு கேதீஸ்வரன்,**
**விசேட ஆணையாளர்,**
வலி. கிழக்கு பிரதேச சபை,
நீர்வேலி.

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
20-03-1997 (ஐ-340)

---

## மோட்டார் வாகனப் பதிவில் மோசடி செய்யும் பேர்வழிகள்

### செயலகத்துக்கு வெளியே நடமாட்டம்

யாழ். செயலகத்தில் மோட்டார் வாகனப்பதிவை மேற்கொள்ள வருபவர்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் பேர்வழிகள் செயலகத்துக்கு வெளியே நடமாடுவதாகத் தெரிய வந்துள்ளது.

மோட்டார் வாகனப் பதிவு செய்ய வருவோரிடம் பணம் பெற்றுக்கொண்டு, போலி ஆவணங்களைத் தயாரித்து வழங்கும் மோசடிகள் இடம் பெற்றுள்ளன.

இந்தப் பேர் வழிகளிடம் சிக்கி ஏமாறாமல் நேரடியாக மோட்டார் வாகனத்திணைக்களத்துக்கு வந்து தமது பணிகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வாகனப்பதிவு மற்றும் உடைமை மாற்றம் போன்ற பணிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை நிரப்ப செயலகத்துக்குள்ளேயே வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ஐ- 3)


## பொலீஸார் மட்டுமே பணியில்

உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பின் போது பாதுகாப்பற்றது எனக் கருதப்படும் இடங்களில் மாத்திரம் பொலீஸ் மா அதிபரின் கண்காணிப்பின் கீழ் இராணுவத்தினர் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்படுவர் எனவும், மற்றப்படி வாக்களிப்பு நிலையங்களில் பாதுகாப்புப் பணிக்கு பொலீஸார் மாத்திரமே ஈடுபடுத்தப்படுவர் என்றும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயகா தெரிவித்துள்ளார்.

---

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 10 — 06 — 1926



மறைவு: 15 — 03 — 1992

### அமரர் காசிப்பிள்ளை சபாரத்தினம்

திதி: **20 - 03 - 1997**

பாசத்தைப் பொழிந்து அன்புடன் வளர்த்து
எம் நெஞ்சங்களில் என்றுமே நீங்காத நினைவுகளுடன்
எம்மை விட்டுப் பிரிந்த பாசமுள்ள பப்பாவே!
தங்கள் ஆத்மா அமைதியுற தினம் தினம்
இறைவன் பாதங்களில் கண்ணீரைக்
காணிக்கையாக்குகிறோம்.

தங்கள் பிரிவால் தவிக்கும்:
**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளை.**

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (45886)

---

தெல்லிப்பழை
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரைவுள்ளது)

சங்க பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கு
விசேட பொதுக்கூட்ட

## முன் அறிவித்தல்

### 1997 - 04 - 27

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 1997 - 04 - 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு (புதிய நேரம்) மல்லாகம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது என்பதைப் பொதுச்சபை உறுப்பினர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.

மேற்படி கூட்டத்தில் 1989 ஆம், 1990 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கைகள் ஆராயப்படும்.

1989 ஆம், 1990 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கைகள் சங்கக் கடமை நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை (புதிய நேரப்படி) மல்லாகம் சந்திக்கு அருகில் உள்ள சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

1996 - 12 - 21 ஆம் திகதி நடைபெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைக்கு அமைய, தவிர்க்கமுடியாத காரணங்களினால் இம்முறை கணக்காய்வு அறிக்கைப் பிரதிகள் அச்சிட்டு விநியோகிக்க முடியாதுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

**சி. சிவமகாராசா** — தலைவர்
**சி. முருகையா** — செயலாளர்

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்,
மல்லாகம்.
18-03-1997 (சி/338)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் ... நூலகம்

# உதயன்

## தமிழில் கடிதம்

தமிழ் மொழியில் எழுதப்படும் கடிதங்களுக்குத் தமிழிலேயே பதில்கள் அனுப்பப்பட வேண்டும். அந்தக் கடிதங்களைத் தூக்கி வீசக் கூடாது,

கண்டியில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய அரசகரும மொழித் திணைக்கள ஆணையாளர் சமரசுந்தர இவ்வாறு அறிவுறுத்தி இருக்கிறார்.

கொழும்பு மாவட்டத்தில் வாக்காளர் இடாப்புகள் சிங்களத்தில் மட்டுமே பதிவு செய்யப் பட்டுள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம் அரசகரும மொழி ஆணைக்குழுவின் தலைவரிடம் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நடந்த போராட்டங்களின் விளைவாக 1987ஆம் ஆண்டிலேயே (அரசமைப்புச் சட்டத்துக்குக் கொண்டுவரப்பட்ட பதின் மூன்றாவது திருத்தத்தின் மூலம்) தமிழும் நாட்டின் உத்தியோக மொழியாக்கப்பட்டது.

அதன் பின்னர் பத்து வருடங்கள் கடந்து விட்டன. தமிழ் உத்தியோக மொழி என்பது காகிதச் சட்டமாக உள்ளதே அன்றி, நடைமுறையில் தமிழ் கீழேயே கிடக்கிறது.

யாழ்ப்பாணத்தில் பொது மக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு கொழும்பிலிருந்து கிடைக்கும் கடிதங்கள், முக்கிய ஆவணங்களில் 99 சத வீதமானவை தனிச் சிங்களத்திலேயே அனுப்பப்படுகின்றன.

தமிழுக்கும் அரச கரும மொழி அந்தஸ்து வழங்கப் பட்டுவிட்டதால், மொழிப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில், அப்போதையஅமைச்சர்கள் மேடைகளில் முழங்கினர்.

ஆனால் தமிழர்களுடன் தமிழில் தொடர்பு கொள்ளவோ அல்லது தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்குத் தமிழில் பதில் எழுதவோ எவ்வித வசதியும் செய்யப் படவில்லை. தமிழ் தெரிந்த ஊழியர்கள் போதிய அளவில் நியமிக்கப்படவில்லை.

இந்தக் குறையை தூக்கிப் பிடித்துக் காட்டுவதில் இன்றைய அரசு காலத்தைக் கடத்துகிறது, அதனாலேயே தமிழில் தொடர்பு கொள்ள முடியாதிருப்பதாகக் கூறுகிறது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்து இரண்டரை வருடங்கள் கழிந்தும் அரச திணைக்களங்களுக்கு தமிழ் தெரிந்த உத்தியோகத்தர்களை, தட்டச்சாளர்களை, சுருக்கெழுத்தாளர்களை, மொழி பெயர்ப்பாளர்களை, எழுதுவினைஞர்களை நியமிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக இல்லை.

மாகாணத்திலேயே ஒரு தமிழ் மொழி பெயர்ப்பாளர் தான் இருக்கிறார்; திணைக்களத்தில் ஒரு தமிழ் எழுதுவினைஞர்தான் பணிபுரிகிறார்; நாம் என்ன செய்ய முடியும் என்ற தோரணையிலேயே பொறுப்பு வாய்ந்த அமைச்சர்களும், உயர் அதிகாரிகளும் பேசுகிறார்கள். குறைபாட்டைத் தீர்த்துத் தமிழ்மக்கள் தங்கள் தாய் மொழியில் தொடர்பு கொள்ளும் உரிமையை அனுபவிக்க உருப்படியாக எதுவும் செய்யப்படவில்லை.

போருக்காகக் கோடி கோடியாகப் பணம் செலவிடப்படும்போது, தமிழ் மொழி அமுலுக்குப் போதிய பணியாளர்களை நியமிக்கப் பணமில்லை என்று சொல்ல முடியுமா?

# துறைமுகத்தை தனியார் மயமாக்கல் அரசின் முயற்சிக்கு கடும் எதிர்ப்பு

### போராட்டம் நடத்தப்படும் என எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 20

கொழும்புத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல் என்ற பெயரில் அங்குள்ள எலிசபெத் இறங்கு துறையை பி. என். ஓ. என்ற சர்வதேச நிறுவனத்திடம் கையளிப்பதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. துறைமுகத்தை தனியார் மயமாக்குவதன் மூலம் அரசு தனது இலக்கினை அடைந்து விட மாட்டாது என துறைமுகத்தை பேணிப் பாதுகாக்கும் அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

துறைமுகத்தை தனியார் மயமாக்கும் முயற்சிகளுக்கு எதிராகப் பரந்த அளவில் வேலை நிறுத்தப் போராட்டங்களை நடத்தவும் தாங்கள் தயார் எனவும் —

அரசின் தனியார் மயமாக்கும் முடிவை எதிர்த்துப் போராட 15 ஆயிரம் துறைமுகத் தொழிலாளர்கள் தயாராய் உள்ளனர் எனவும் அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது. (ஐ- 10)

# கிராமச் சங்க முறை மீண்டும் அமுலாகும்

கொழும்பு, மார்ச் 20

"அரசமைப்புச் சட்டத்தில் மாற்றங் கொண்டுவரப்பட்டு மீண்டும் கிராமச் சங்க முறை அமுலுக்குக் கொண்டுவரப்படும். இம் மாதம் 21 ஆம் திகதி நடைபெறும் பிரதேச சபைகளுக்கான தேர்தல் தான் பிரதேச சபைகளுக்கான கடைசித் தேர்தலாக இருக்கும்."

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ். பி. திஸநாயக்கா மேற் கண்டவாறு கூறினார்.

இந்த பிரதேச சபை முறை எங்கள் நாட்டுக்குப் பொருந்தவில்லை. எனவே இந்த வருடத்திலேயே அரசமைப்புச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்பட்டு முன்னர் நடைமுறையில் இருந்த கிராமச் சங்க முறை அமுலுக்குக் கொண்டுவரப்படும் என்றும் அவர் கூறினார். (இ-10)

★ அரச, மாகாண சேவை ஊழியருக்கு

# மூன்று அம்ச காப்புறுதித் திட்டம் யாழ்ப்பாணத்திலும் அறிமுகம்

அரசாங்க சேவையிலும் மாகாண அரசாங்கசேவையிலும் உள்ள சகல நிரந்தர உத்தியோகத்தர்களுக்குமான 3 அம்சங்களைக் கொண்ட காப்புறுதித்திட்டம் யாழ்ப்பாணத்திலும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டம் 01 - 01 - 1997 இல் இருந்து அமுலுக்கு வந்துள்ளது.

இதற்கமைய வைத்தியக் காப்புறுதி, விபத்துக் காப்புறுதி, கடன்பிணை காப்புறுதி என மூன்று வகைக் காப்புறுதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதில் வைத்திய காப்புறுதித் திட்டத்துக்கு மாதாந்த கட்டுப் பணம் அரசினாலேயே செலுத்தப்படவுள்ளது. உரித்துடைய எல்லா உத்தியோகத்தரும் இத்திட்டத்தில் கட்டாயமாகச் சேர்க்கப்படுவர். இத்திட்டத்தின் மூலம் அரச உத்தியோகத்தருக்கு ஏற்படும் வைத்தியச் செலவுகள் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால்மீளளிப்புசெய்யப்படும்

விபத்துக் காப்புறுதி, கடன் பிணைத் திட்டத்தில் சேர விரும்பும் உத்தியோகத்தர்கள் மாத்திரம் மாதாந்தக் கட்டணமாக 11 ரூபா செலுத்த வேண்டும்.

இதற்கான வயதெல்லை 18 முதல் 60 வரை ஆகும்.

புதிதாகச் சேவைக்குச் சேர்க்கப்படுபவர்கள் சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட பின்பே திட்டத்தில் சேரத் தகுதியுடையவராவார்.

விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை திணைக்களத்தில் பெற்று பூர்த்தி செய்து திணைக்களத் தலைவரிடம் ஒப்படைக்கவேண்டும். திணைக்களத்தலைவர் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு அனுப்பி வைப்பார்.

இதற்கமைய ஏற்பட்ட விபத்து அல்லது சுகயீனம் பற்றிய அறிவித்தலை அது நடந்த 14 நாள்களுக்குள் திணைக்களத் தலைவருக்கு அறிவிப்பதுடன் வைத்திய ஆலோசனைக்கான அத்தாட்சிப் பத்திரம் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவரால் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதும் அத்தொகைக்கான காசோலையை காப்புறுதித் கூட்டுத்தாபனக்கிளையானது இரண்டு வாரத்தில் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கும்.

அந்தக் காசோலையை பொது வைப்புக் கணக்கில் வைப்பிலிட்டு அதன்பின்னரே கொடுப்பனவுகள் செய்யப்படும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-15)

# மரக்கறி வாங்கிவரச் சென்றவர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

மரக்கறி வாங்கிவரச் சென்றவர் பாழடைந்த கிணறு ஒன்றினுள் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் நாயன்மார் கட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பரமு யோகராசா (வயது 40) என்பவரே உயிரிழந்தவராவார்.

மத்தியானச் சமையலுக்கு மரக்கறி வாங்கச் சென்றவர் பிற்பகல் 2 மணியாகியும் திரும்பி வராததை அடுத்து உறவினர்கள் அவரைத் தேடிச் சென்றனர்.

வீதி ஓரத்தில் இருந்த தூர்ந்துபோன கிணறு ஒன்றினுள் எட்டிப்பார்த்தபோது அவர் அணிந்திருந்த செருப்பு மற்றும் அடையாள அட்டை, காய்கறிகள் என்[illegible]தைக் கண்டு உடன் பொலீஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. பொலீஸாரின் உதவியுடன் பின்னர் கிணற்றில் சேற்றில் புதையுண்ட நிலையில் கிடந்த அவரது சடலம் மீட்கப்பட்டது.

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு மரண விசாரணையின் பின் நேற்று உறவினரிடம் கையளிக்கப்பட்டது. (ஐ-15)

## நாளை

**பங்குனி 8**

**வெள்ளிக்கிழமை**

**திதி:** திரயோதசி முழுவதும்

**நட்சத்திரம்:** மகம் வைகறை 06.11 வரை.

பிரதோஷ விரதம்

**சுபநேரம்:** 06.18-07.48

**ராகுகாலம்:** 10.48-12.18

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சோனகதெரு அ. அட்டை

யாழ்ப்பாணம், சோனக தெரு வடக்கு பகுதி ஜே/87 கிராமசேவையாளர் பிரிவுக்குரிய விசேட அடையாள அட்டைகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நாவாந்துறை பாதுகாப்புப் படை முகாமில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வியாகுல அன்னை பெருவிழா

இளவாலை வியாகுல அன்னை பெருவிழா இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு திருப்பலியும் திருச்சுரூபப் பவனியுடன் ஆரம்பமாகி நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் மாலை 5 மணிக்கு சிலுவைப் பாதையும் இடம்பெறும். (இ-4)

# வவுணதீவு முகாம் பொறுப்பாளர் விசேஷ பதக்கம் பெறுவார்

கொழும்பு, மார்ச் 20

இராணுவத்தைச் சேர்ந்த கப்டன் ஹேபகே சுகத்தாபறே என்பவருக்குவிசேஷ பதக்கம் ஒன்றை வழங்க இலங்கை இராணுவத் தலைமையகம் தீர்மானித்துள்ளது.

இவர் அண்மையில் தாக்குதலுக்கு உள்ளான வவுணதீவு இராணுவ முகாமுக்குப் பொறுப்பாக இருந்தவர்.

முகாம் தாக்கப்பட்டபோது படையினருக்குத் தகுந்த கட்டளைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கி முகாமிலிருந்த படையினரை நெறிப்படுத்தியமைக்காக இவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# விளையாட்டுப் போட்டிகள்

தென்மராட்சி, மார்ச் 20

சசாவகச்சேரிமறவன்புலோ கலகலாவல்லி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று 9 30 மணிக்கு அதிபர் ச. ஞானலிங்கம் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக யாழ். கல்வி வலயம் I பணிப்பாளர் சு. இரத்தினராசாவும் சிறப்பு விருந்தினராகத் தென்மராட்சி கோட்டக் கல்வி அலுவலர் இ. கணேசனும், உதவிக்கல்விப் பணிப்பாளர் க. சத்தியநாதனும் கலந்து கொள்வார்கள். (ஐ-117)

★ ★ ★

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று வியாழன் பிற்பகல் 2 மணி முதல் அதிபர் அ. ஈஸ்வரதாசன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக முன்னாள் யாழ். இந்து அதிபர் அ. பஞ்சலிங்கம் கலந்து கொள்வார். (ஐ)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ். கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் அதிபர் திரு. வி. மாணிக்கம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக வைத்தியக் கலாநிதி அ. யோகராசா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக இளைப்பாறிய உடற் கல்வி சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. க. யதுகுலசிங் கலந்துகொள்வார். (ஐ)

★ ★ ★

ஊரெழு கணேச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக ஊரெழுவில் நீண்டகாலமாக கிராம சேவை அலுவலராகக் கடமையாற்றி அண்மைக் காலத்தில் பதவி உயர்வு பெற்று உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடமையாற்றிவரும் திரு. வே. சின்னத்துரை கலந்து கொள்வார். (ஐ)

★ ★ ★

குருநகர், மார்ச் 20

யாழ். புனித றோக் றோ. க. வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை மு. ப. 9.30 மணி தொடக்கம் பாடசாலை மைதானத்தில் பிரதி அதிபர் தி. சத்தியபாலன் தலைமையில் நடைபெறும். யாழ். கல்வி வலயம் - 1 கல்விப் பணிப்பாளர் எஸ். இரத்தினராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ஐ-51)

★ ★ ★

நெடுந்தீவு, மார்ச் 20

நெடுந்தீவு றோ. க. மகளிர் வித்தியாலய மெய்வல்லுநர் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை வித்தியாலய அதிபர் அருட்செல்வி றொட்றிக்கோ ஜெயசீலி தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக நெடுந்தீவு கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். தில்லைநாதனும், சிறப்பு விருந்தினராக நெடுந்தீவு பங்குத் தந்தை அருட்திரு. ஏ. சி. கிறிஸ்தோப்பரும் கலந்து கொள்வர். (ஐ-111)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 20

வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று காலை 9 மணிக்கு அதிபர் மு. செல்லையா தலைமையில் நடைபெறும், பிரதம விருந்தினராக "மில்க்வைற்" நிறுவன அதிபர் க. கனகராசா கலந்து கொள்வார். (ஐ)

★ ★ ★

வடமராட்சி, மார்ச் 20

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை அதிபர் வீ. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

கரவெட்டிக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வி. செல்வராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஐ-173)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யுத்தம் உட்பட

# சகல பிரச்சினைகளும் 4 வருடத்தில் தீர்வு

## சந்திரிகா கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 20

எமது அரசாங்கம் சிறந்த திட்டமிட்ட கொள்கை ஒன்றின் அடிப்படையில் முன்னோக்கிச் செல்வதால், 4 வருடங்களில் யுத்தம் உட்பட சகல பிரச்சினைகளையும் தீர்த்து விடமுடியும்''

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

காலியில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார்.

ஐ. தே. க. ஆட்சியின் 17 வருட காலமும் இனவாத அரசியல் மேற்கொள்ளப்பட்டதையே காணமுடிந்தது.

தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அச்சத்துடன் வாழும் நிலை நிலவியது. அத்துடன் மக்கள் தமது பாதுகாப்பை தாமே பெற வேண்டிய நிலையும் இருந்தது.

இப்படி அவர் மேலும் கூறினார், (இ-3)

# மாலைதீவு படையினர் இலங்கையில் பயிற்சி

மாலைதீவுதேசியபாதுகாப்புப்படையினருக்கு இலங்கை விசேட கொமண்டோ அணி (எஸ். ரி. எவ்) யினர் பயிற்சி அளிப்பது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

5 ஆண்களுக்கு முன்னர் மாலைதீவுப் படையினருக்கு இலங்கைப் படையினர் பயிற்சி அளித்து வந்தனர்.

இலங்கைத் தீவிரவாதக் குழு ஒன்று மாலைதீவில் தாக்குதல் நடத்தியதை இந்தியபடை முறியடித்ததை யடுத்துஇந்தப் பயிற்சித் திட்டம் தடைப்பட்டிருந்தது.

மீண்டும் இந்தப் பயிற்சித் திட்டம் செயற்படுத்தப் பட்ட பின்னர் 30 மாலைதீவுப் படையினர் பயிற்சி பெற்றுத் திரும்பியுள்ளனர்.

நேருக்குநேர் முகம் கொடுத்துச் சண்டையிடல், தானியங்கித் துப்பாக்கிகளை இயக்குதல் ஆகிய பயிற்சிகள் அவர்களுக்கு அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)


## இதய அஞ்சலி

''உதயன்'' அச்சகப் பகுதியில் கடமை புரியும்

செல்வி. T. A. மேசி,

''உதயன்'' பாதுகாப்புப் பகுதியில் பணியாற்றும்

திரு. T. A. டானியல்

ஆகியோருடைய அருமைத் தாயாரான

திருமதி தேவதாஸ் மேரிமாகிறேற்

அவர்களின்

மறைவினால் ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவர்களுக்கும், குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துஆத்மா சாந்தி பெற பிரார்த்தித்து இதய அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

சக ஊழியர்கள்,
அச்சகப் பகுதி,
உதயன் பணிமனை.

(சி/347)

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் கடமையாற்றும் சக பாதுகாவலர்

திரு. T. A. டானியல்

அச்சகப்பகுதியில் கடமையாற்றும்

செல்வி T. A. மேசி

ஆகியோரின் அன்புத் தாயார்

திருமதி தேவதாஸ் மேரிமாகிறேற்

அவர்களது மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாதுகாப்பு ஆலோசகரும்,
பாதுகாப்பு உத்தியோகத்தர்களும்.

உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(சி-342)

## மீண்டும் தன் சேவையில்...!
## நவீன மருத்துவமனை...!!
## (MODERN HOSPITAL)

மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்,
யாழ்ப்பாணம்.

யாழ். மாவட்ட மக்களின் வைத்திய சேவையில் கடந்த பல ஆண்டுகளாப் நம்பிக்கை நட்சத்திரமாய்—இரவு—பகலாகப் பணியாற்றிவந்த மேற்படி வைத்தியசாலை 21-03-97இல் இருந்து மீண்டும் தன் சேவையினைத் தொடங்கவுள்ளது என்பதை பணிவுடன் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

★ நாட்டு நிலைமையால் கடமை நேரம்
காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை.
★ மருத்துவ ஆய்வுகூட வசதி
★ நிபுணத்துவ வசதி
★ வாட் வசதி

— பணிவுடன் என்றும்
தங்கள் சேவைக்குரிய
டாக்டர் ஆ. பேரின்பநாதன்
(பணிப்பாளருக்காக)

(45891)


# நாளை நடக்கும் தேர்தலுக்கு முழு ஏற்பாடுகளும் தயார்

கொழும்பு, மார்ச் 20

நாளை நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் திணைக்களம் தெரிவிக்கிறது.

தேர்தல் கடமைகளில் சுமார் ஓர் இலட்சம் பணியாளர்கள் ஈடுபடுவர். இவர்கள் நேற்று முன் தினத்திலிருந்து தமது கடமைகளைப் பொறுப்பேற்க குறிப்பிட்ட வாக்களிப்பு நிலைங்களுக்கு செல்லத் தொடங்கியுள்ளார்கள். இதற்காக விசேஷ ரயில்களும், பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அதே சமயம் நாளை நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் அரசியல் கட்கிகளின் செல்வாக்கை அளக்கும் கருவியாக அமைவதுடன் கடந்த இரண்டரை ஆண்டுகளாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு மக்கள் அளித்துவந்த ஆதரவு தொடருமா என்பதையும் எடுத்துக் காட்டும் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

1994 இல் 62 சதவீத வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த பொ. ஐ. முன்னணி அரசுக்கும் ஜனாதிபதிக்கும் இத்தேர்தலில் அதேசதவீத வாக்குகளைப் பெறும் வாய்ப்பில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## தவறுதலாக வெடித்தே மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

கடந்த திங்கட்கிழமை நெடுந்தீவில் ஈ. பி டி. பி அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் சபேசன், துப்பாக்கி தவறுதலாக வெடித்ததனாலேயே இறந்ததாக.இப்போது தெரிவிக்கப்படுகின்றது.

அன்றைய சம்பவத்தில் தமது மற்றொரு உறுப்பினர் காயம் அடைந்ததாகவும் ஈ. பி. டி. பி. யாழ் அலுவலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலிலேயே சபேசன் இறந்தார் என்று முன்னர் தகவல் வெளியிடப்பட்டிருந்தது. (அ-3)

## புலைமைப் பரிசில்

யாழ். செயலகத்தில் பிரிதம கணக்காளராக பணிபுரயும் சு. சிவபாலன் ஓய்வூதியப் பகுதி பிரதம கணக்காளர் கா. வீரசிங்கம் ஆகிய இருவரும் புலமைப் பரிசில்பெற்று புதுடில்லி செல்கிறார்கள்.

இவர்கள் இருவரும் இலங்கை கணக்காளர் சேவை முதலாம் தரத்தைத் சேர்ந்த சிரேஷ்ட கணகாச்ளர்கள் என்பது குறிப்க்பிடதக்கது. (இ-100)

## பதவியேற்பு

அண்மையில் மரணமான கயானா நாட்டு அதிபர் செட்டி ஜெகனின் விதவை மனைவி ஜயனத் ஜெகன் கடந்த திங்களன்று கயானாவின் புதிய அதிபராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

மக்களின் ஏகோபித்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு அந்தப் பதவியைத் தாம் ஏற்றதாக அவர் தெரிவித்தார். கயானாவில் பதவி ஏற்கும் முதல் பெண் அதிபர் இவரேயாவார்.

## மதுபான நிலையங்கள் மூடு விழா

கொழும்பு, மார்ச் 20

உள்ளூராட்சித் தேர்தலையொட்டி உத்தரவு பெற்ற மதுபான விற்பனை நிலையங்கள் அனைத்தும் இன்றும், நாளையும், நாளை மறுதினமும் மூடப்பட வேண்டும் என அரசு அறிவித்துள்ளது.

23 ஆம் திகதி போயா தினமாகையால் மதுபான விற்பனை நிலையங்கள் அன்றும் மூடப்பட்டிருக்கும். (இ-10)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)

னர்.

விடுதலைப் புலிகளால் ஏவப்பட்ட மூன்று ஷெல்களும் கடற்படைப் படகுக்கு உள்ளே விழவில்லை. இதனால் பாரிய சேதத்தில் இருந்து அந்தப் படகு தப்பியது.

டோறா படகு மீது மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்துவதற்காகவே, கடற் புலிகள் திட்டமிட்டு அந்தப் படகைக் கரைக்கு வரச்செய்துள்ளனர்.

கரைக்குகடற்படைப்படகுகளை இழுத்துத் தாக்கும் புதிய தந்திரோபாயம் ஒன்றைப் புலிகள் தற்சமயம் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளனர்.

கடந்த மாதம் 8 ஆம் அல்லது 9 ஆம் திகதியில் மன்னார்ப் பகுதியில் கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்கும் இடையில் நடந்த மோதல் ஒன்றின் போதும் டோறா படகு ஒன்று சேதமடைந்திருந்தது.

முல்லைத்தீவு, மன்னார், கடற்பகுதியிலும், யாழ். கடலேரிப் பகுதியிலும் கடற் புலிகளின் நடமாட்டங்கள் அதிகரித்துள்ளன — என்று அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (இ- 3- 150)

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்)

டிகள் ஒட்டப்பட்டு வருகின்றன.

''நாட்டுக்கு சந்திரிகா, நகருக்கு ஆனந்தா''என்று கூறும் சுவரொட்டிகளும் காணப்படுகின்றன.

கணேசலிங்கம் ஆயிரம் விருப்பு வாக்குகளைப் பெற்றாலும் அவரே கொழும்பு மேயர் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதிபடக் கூறிவிட்டாராம். (இ- 150-3)


## டிராக்ரர் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 'மஸி பேர்குஸன்' உழவு இயந்திரம் (25 ஸ்ரீ 6377 இலக்கமுடையது) கலப்பை மற்றும் பெட்டியுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
[illegible]
மந்திகை அலுபத்திரி
முன் வீதி, புலோலி.

(சி/344)


## எம். ஐ. - 24....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலிக்கொப்டரும் மற்றும் ஒரு ஹெலிக்கொப்டரும் பலாலி விமானத்தளத்திலிருந்து புறப்பட்டு கிழக்குக் கரையில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன என்றும் —

காணாமற்போன ஹெலிக் கொப்டரில் ஹெலியோட்டி உட்பட நால்வர் இருந்தனர் என்றும் — மேலும் தெரிவிக்கப்படுகிறது

காணாமற்போன ஹெலியைத் தேடும் முயற்சியில் விமானப்படையினரும், கடற்படையினரும் நேற்றுத் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். எனினும் பலன் எதுவும் கிடைக்கவில்லை.

இதற்கிடையில், இந்த ஹெலியை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தினரா என்பது உடனடியாகத் தெரியவரவில்லை என்று வெளிநாட்டு செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

பொலன்னறுவையில் புக்காரா குண்டு வீச்சு விமானம் ஒன்று வெடித்துச் சிதறி மூன்று தினங்களில் இலங்கை விமானப் படைக்கு தற்பொழுது மற்றொரு இழப்பு ஏற்பட்டுள்ளது. (இ-3-4)

## விமானப் ..

(முதலாம் பக்கத் தொடர்)

கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்குப் பயணிகள் கப்பல் சேவை இடம் பெறவிருக்கிறது.

இந்தச்சேவையில் 940 பயணிகள் அழைத்துச் செல்லப் பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் சிவில் அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 546க்கு உட்பட்டவர்களை நாளை காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## அடிக்கடி...

(முதலாம் பக்கத் தொடர்)

உள்ள போர் விமானங்களில் இதுவரை ஐந்தில் ஒரு பகுதி இழக்கப்பட்டு விட்டதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

அரசுக்குச் சொந்தமான விமானங்கள் இவ்வாறு அடிக்கடி தொடர்ச்சியாக இழக்கப்படுவதற்கான உண்மையான, சரியான காரணங்களைக் கண்டறியும் பொருட்டு முழு அளவிலான விசாரணையை நடத்துமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விமானப்படைத் தளபதிக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, விமான விபத்துக்களை ஆராய்வதில் தேர்ச்சியுள்ள வெளிநாட்டு நிபுணர்களை அழைத்துப் புறம்பான விசாரணைகளை நடத்தவும் அரசு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. பல வெளிநாட்டு நிபுணர்களுக்கு இது சம்பந்தமான அழைப்புகள் அனுப்பப்பட்டு விட்டன.

1995 ஏப்ரலின் பின்னர் காணாமற் போன, தாக்குதலுக்கு உள்ளாகிச் சேதமடைந்த விமானங்களின் எண்ணிக்கை வருமாறு:-

அவ்ரோ விமானங்கள் — 2, புக்காரா தாக்குதல் விமானங்கள் 2, அன்ரனோவ் — 32 ரக விமானங்கள் — 3, வை — 8 ரக சீனத் தயாரிப்பு விமானம் — 1, வை — 12 சீனத் தயாரிப்பு விமானம் — 2, இஸ்ரேல் தயாரிப்பு கிபிர் தாக்குதல் விமானம் — 1, தானியங்கி உளவு விமானம் — 1, ரஷ்ய தயாரிப்பு எம். ஐ. 17 ஹெலி — 1, ரஷ்யத் தயாரிப்பு எம். ஐ. 24 ஹெலி — 1, பெல் 212 ரகக் ஹெலி — 1.

இழக்கப்பட்ட விமானங்களின் திகதிவாரியான விவரம் வருமாறு:

- ★ 28-4-95 — அவ்ரோ
- ★ 29-4-95 — அவ்ரோ
- ★ 14-7-95 — புக்காரா
- ★ 13-9-95 — அன்ரனோவ்-32
- ★ 18-11-95 — வை -8
- ★ 22-11-95 — அன்ரனோவ் -32
- ★ 22-11-96 எம். ஐ. 17 (ஹெலி)
- ★ 7-12-96 — பெல் 212 (ஹெலி)
- ★ 6-1-97 — தானியங்கி உளவு விமானம்
- ★ 20-1-97 — வை -12
- ★ 21-1-97 — கிபிர்
- ★ 21-2-97 — அன்ரனோவ் -32
- ★ 6-3-97 — வை -12
- ★ 15-3-97 — புக்காரா
- ★ 19-3-97 — எம். ஐ. 24 (ஹெலி) (அ-4-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-03-1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org